**இராமநாதபுரம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை.**

முன்னிலை.. திரு வ.வெங்கடாசலபதி, எம்ஏ,எச்டிசி.,
துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர்.

ந.க.எண்..1236/2019/கு.

நாள் 30.08.2019.

பொருள் .. பணியமைப்பு - கூட்டுறவுத் துறை - இராமநாதபுரம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ரு.சதீஸ்குமார், பதிவறை எழுத்தர்–பொது சார்நிலைப் பணியில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டதை ரத்து செய்தது - புதிய ஆணை வெளியிடல் - தொடர்பாக.

பார்வை .. 1) சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகக் கடிதம் நக.11256/2010/பதொ(4) நாள் 30.05.2011
2) திருநெல்வேலி மண்டல இணைப்பதிவாளர் செயல்முறை ஆணை நக.4905/2011/பதொ(1) நாள் 17.12.2011
3) இராமநாதபுரம் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் செயல்முறை ஆணை நக.1236/2019 நாள் 02.07.2019

----

ஆணை

பார்வை (1)ல் கண்ட கடிதத்தின்படி திரு.ரு.சதீஸ்குமார், கருணை அடிப்படையில் பதிவறை எழுத்தராக திருநெல்வேலி மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)ல் காணும் செயல்முறை ஆணையின்படி 12.01.2012 முற்பகல் முதல் பதிவறை எழுத்தராக திருநெல்வேலி மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்துள்ளார்.

இவர் 15.6.2018 பிற்பகல் முதல் இராமநாதபுரம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் பணியில் சேர்ந்த நாளான 12.01.2012 முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளில்இரண்டாண்டு கால பணிக்காலத்தை 09.02.2014 பிற்பகல் முதல் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதி 5 வகை 1-A ன்படி மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் பணி நிபந்தனைகள் சட்டம் 2016 பிரிவு 30-ன்படி தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடித்துள்ளார் என விளம்பி ஆணையிடப்படுகிறது.

தனியருக்கு பார்வை (3)ல் காணும் செயல்முறை ஆணையின்படி ஏற்கனவே தகுதிகாண் பருவம் முடித்து வழங்கப்பட்டஆணை இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

இணைப்பு.. தகுதிகாண் பருவம் கணக்கீட்டுத்தாள்

30/8/19

துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர்,
இணைப்பதிவாளர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

30.8.19

பெறுநர்

திரு ரு.சதீஸ்குமார்,
பதிவறை எழுத்தர்,
இணைப்பதிவாளர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

நகல் .. பணிப்பதிவேட்டிற்கு.
நகல.. இருப்பு கோப்பிற்கு